சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 98/2016

பெயர் திரு. பாலகிருஷ்ணன் நாள். 10.04.2026
த/பெ. பச்சையப்பன்

**4ம் பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என்னுடைய பிறந்த தேதி 05.05.1995. **பி.த.சா.ஆ.1** தேதியில் எனக்கு சுமார் எனக்கு 11/2 வயது இருக்குமென்றால் சரிதான். எனவே, பி.த.சா.ஆ.1 பற்றி நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். பி.த.சா.ஆ.1 ல் பங்காருக்கு பூர்வீகமாய் கிடைத்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிருஷ்ணனுக்கு பங்காரு, ராஜாராம், சாந்தா மற்றும் ஒருவர் பிள்ளைகள் ஆவர். என் தகப்பனாருக்கு தற்போது 50 வயது ஆகிறது. அவர் நோயுற்று, நடமாட முடியாமல், அன்றாட பணிகளை கூட செய்ய முடியாமல் உள்ளார் என்பதற்கு மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கில் என் தகப்பனார் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை விபரங்கள் தெரியும். என் தகப்பனார் சொல்லித் தெரியும். இவ்வழக்கில் நான் எனக்காகவும், என் தகப்பனாருக்காகவும் சேர்ந்து சாட்சியமளிக்கிறேன். பங்காரு மற்றும் ராஜாராம் ஆகியோர் குடும்ப சொத்துக்களை வாய் வழியாக பாகம் பிரித்து கொண்டதாக என் தகப்பனார் எதிர் வழக்குரையில் கூறியுள்ளது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

2) 1994 ல் பங்காரு பெயரில் எதனடிப்படையில் பட்டா கொடுத்தார்கள் என்று எனக்கு நேரடியாக எனக்கு தெரியாது. பி.த.சா.ஆ.1 கிரையம் தவறானது என்றால் சரியல்ல. என் தகப்பனார் இவ்வழக்கில் சாட்சியமளித்தால் உண்மை விபரங்கள் தெரிய வரும் என்றாலும், அதனால் தான் அவர் இவ்வழக்கில் சாட்சியமளிக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. பி.த.சா.ஆ.1 அடிப்படையில் என் தகப்பனார் இன்யை தேதி வரை பட்டா மாற்றம் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். வழக்கில் நிலுவையில் இருந்ததால் மாற்ற முடியவில்லை. என் தகப்பனாருக்காக நான் சாட்சியமளிக்க இயலாது என்றாலும், என்னுடைய சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்று சொன்னாலும் சரியல்ல. வாதிகள் கோரியவாறு வழக்கு செலவு தொகையுடன் தீர்ப்பளிக்க வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை– இல்லை.</u>**